**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 14 December 2021

## செய்திக்கொத்து

# தடம் பதித்த இளம் விஞ்ஞானிகளுக்கு விருது



இளம் விஞ்ஞானி விருதைப் பெற்ற (இடமிருந்து) டாக்டர் சாங் ஹான்வாங், டாக்டர் யிவோன் காவ், டாக்டர் சாரா லுவோ. இந்த மூவரும் இளம் வயதிலேயே முத்திரை படைத்த விஞ்ஞானிகள். விருதுகளைத் துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் வழங்கினார்.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இளம் வயதிலேயே முத்திரை பதித்துள்ள மூன்று விஞ்ஞானிகளுக்கு இளம் விஞ்ஞானி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் சாங் ஹான்வாங், டாக்டர் யிவோன் காவ், டாக்டர் சாரா லுவோ ஆகிய மூவருக்கும் துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் கடந்த வெள்ளிக்கிழமையன்று விருதுளை வழங்கினார்.

தற்போதைய உயர் ரக கணினிகளைவிட அதிக ஆற்றல்மிக்க குவான்டம் கணினிக்குத் தேவையான வன்பொருளை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பிரிவைச் சேர்ந்த 33 வயது டாக்டர் காவ் தயாரித்து வருகிறார்.

உணவு சாப்பிடும் முறை, பழக்கவழக்கம் ஆகியவற்றை நமது மூளையில் உள்ள நியூரோன்கள் தீர்மானிப்பதாக ஆராய்ச்சிகள் மூலம் ஏஸ்டார் அமைப்பின் மூலக்கூறு, உயிரணு உயிரியல் பிரிவைச் சேர்ந்த 35 வயது டாக்டர் லுவோ கண்டுபிடித்துள்ளார்.

தேவைக்கு அதிகமாக சாப்பிடுவது, உடல் பருமன் ஏற்படுவது ஆகியவற்றுக்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வு காண இந்தத் தரவுகள் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் அறிவார்ந்த, புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை உருவாக்க வேண்டும் என்ற முனைப்புடன் இருக்கிறார் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 34 வயது டாக்டர் சாங் ஹான்வாங்.

அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்துக்கு முக்கியமாக விளங்கக்கூடிய அம்சங்களை டாக்டர் சாங்கும் அவரது குழுவினரும் கண்டுபிடித்துள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.